டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்

மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 28.6.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 010 - Madurai | Online Edition

# நெல் கொள்முதலுக்கான ஊக்கத்தொகை அதிகரிப்பு

## தமிழக முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஜூன் 27

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலன் கருதி 2024-25ஆம் ஆண்டு நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையுடன் காரீப் கொள்முதல் பருவத்திற்கு சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105/-ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130/-ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு சார்பில் வெளியிடபட்டுள்ள அறிக்கையில், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் காரீப் 2024-25 நெல் கொள்முதல் பருவத்திற்கு ஆதார விலையுடன் ஊக்கத்தொகையும் சேர்த்து விவசாயி களுக்கு வழங்குவது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் 26.6.24ல் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கடந்த 2023-2024 காரீப் கொள்முதல் பருவத்தில் 25.6.24 வரையில் 3,175 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 3.72,310 விவசாயிகளிடமிருந்து 29,91,954 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.6,442.80 கோடி விற்பனை தொகையாக வழங்கப்பட்டது ஆகிய விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அதே அடிப்படையில், இந்த ஆண்டும் காரீப் கொள்முதல் 2024-2025 பருவத்தில் தேவையான அளவு நேரடி நெல் கொள் முதல் நிலையங்களைத் திறந்து ஒன்றிய அரசின் பரவலாக் கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

இந்தாண்டு 12.6.24ல் மேட்டூர் அணை திறக்கப்பட இயலாத சூழ்நிலையில், டெல்டா மாவட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் குறுவைத் தொகுப்பு திட்டத்தினை முதலமைச்சர் செயல்படுத்திட உத்தரவிட்டார். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் விவசாயிகளின் நலன் கருதி காரீப் 2024-2025 பருவத்திற்கான நெல் கொள்முதலினை 1.9.24 முதல் மேற் கொள்ள ஒன்றிய அரசை, இவ்வரசு கேட்டுக் கொண்டதற் கிணங்க ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் காரீப் 2024-2025 பருவத்திற்கான நெல் மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளது.

கொள்முதலினை 1.9.24 முதல் ஒன்றிய அரசு அண்மையில் காரீப் 2024-2025 பருவத்திற்கு குறைந்தபட்ச ஆதார விலை யாக சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2.300/- என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,320/- என்றும் நிர்ணயித்துள்ளது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியினைப் பெருக்கும் வகையிலும், விவசாயிகளின் வாழ்வை வளப்படுத்தி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு 2024-2025 காரீப் கொள்முதல் பருவத்திற்கு (Kharif Marketing Season) சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105/-ம், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130/-ம் கூடுதல் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு அரசின் நிதியிலிருந்து வழங்கிடவும், அதன்படி விவசாயிகளிடமிருந்து சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,405/- என்றும், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,450/- என்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்திட முதலமைச்சர் உத்தவிட்டுள்ளார்.

இந்த புதிய குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் மாநில அரசின் ஊக்கத் தொகை 1.9.24 முதல் நடைமுறைக்கு வரும். அத்துடன், தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, அடுத்து வரும் 2025-26 நிதியாண்டில், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/- என்ற வீதத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு வழங்கிடவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சமச்சீர் உர பயன்பாடு தொடர்பான விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது



திண்டுக்கல், ஜுன் 27

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் ஜி.நடுப்பட்டி கிராமத்தில் சமச்சீர் உர பயன்பாடு தொடர்பான விவசாயிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு ஜி.நடுப்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் ரவி தலைமை வகித்தார். ரெட்டியார்சத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் முன்னிலை வகித்தார். இப்பபிற்சியில் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் மணிகண்டன் விவசாயி களுக்கு உர நிர்வாகம், மண்வள மேலாண்மை, இயற்கை பயிர் பாதுகாப்பு முறைகள், சமச்சீர் உரப்பயன்பாடு மற்றும் இயற்கை வேளாண்மை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சந்திரகலா வேளாண்மை துறை திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். விவசாயிகள் அனைவரும் மண் பரிசோதனை செய்து அதன்படி உரமிட வலியுறுத்தினார். மேலும் உழவர் செயலி குறித்து விளக்கினார். தோட்டக்கலைத்துறை உதவி தோட்டக்கலை அலுவலர் சக்திவேல் தோட்டக்கலை துறையின் மானியத் திட்டங்கள் பற்றி கூறினார். அக்கிராமத்தின் முன்னோடி விவசாயி கார்த்திக் குமார் பஞ்சகவ்யா தயாரிப்பு, மீன் அமினோ அமிலம் தயாரிப்பு குறித்து கூறினார்.

மேலும் அவர் எவ்வாறு தயாரித்து தனது வயலில் பயன் படுத்தினார் என்பதையும் அதனால் அவரடைந்த பலன்கள் பற்றியும் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

EDII பெரியகுளம் தோட்டக்கலைத்
தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
பெரியகுளம், தேனி மாவட்டம்

# லாபம் தரும் பால் காளான் தொழில்முனைவோராக EDII பெரியகுளம் அன்புடன் அழைக்கிறது...

முதல் பேட்ச் 25 நபர்கள் மட்டுமே. பேட்ச் ஜுலை 20, 2024 துவங்குகிறது

## பால் காளான் பண்ணை நேரடி பார்வையிடல்
30.06.2024, ஞாயிற்றுக்கிழமை

கட்டணம் ரூ.20,000

தங்கள் சந்தேகங்களை நேரில் தெளிவுபடுத்திக் கொள்ள அருமையான வாய்ப்பு



நேரடி பார்வையிடலுக்கு முன்பதிவு அவசியம்

6379140583 என்ற எண்ணில் அழைத்து முன்பதிவு செய்து கொள்ளவும்

- 5 நாட்கள் தொழில்நுட்ப பயிற்சி
- 2 ஆண்டுக்கு தொடர்ந்த தொழில்நுட்ப உதவி
- கடனுதவி மற்றும் மானியம் பெறுவதற்கு உதவி
- மார்க்கெட்டிங் / கொள்முதல் உத்தரவாதம்

இடம் : தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம், தேனி மாவட்டம்
நேரம் : காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

நாள் ஒன்றுக்கு ரூ.3000 முதல் ரூ.5000 வரை நிகர வருமானம் ஈட்ட வாய்ப்பு !

விண்ணப்பிக்க கடைசி தேதி : 15.07.2024

தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
பெரியகுளம், இந்தியா - 625 604. 9361921828 / 6379140583
ceo@ediiphbif.org, ediitnaupkm@gmail.com, www.ediiphbif.org

# பட்டப்படிப்பு படித்த இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில் துவங்க விண்ணப்பிக்கலாம்

செங்கல்பட்டு, ஜூன் 27

2024-25 ஆம் நிதியாண்டில் வேளாண் நிதிநிலை அறிக்கையில் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்களை ஊக்குவித்து வேளாண் தொழில் முனைவோராக்கும் விதமாக பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் இளநிலை பட்டப்படிப்பு படித்த இளைஞர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில் துவங்க, பட்டதாரி ஒருவருக்கு அதிகபட்சமாக ரூபாய் 1 லட்சம் மானியம் வழங்கிட இலக்கு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட இத்திட்டத்தில் பட்டதாரி இளைஞர்கள் தங்களது மூலதனத்தில் பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குரு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) அல்லது வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AIF) திட்டத்தின் கீழ் அனுமதிக்கக்கூடிய சுய தொழில்கள் நிறுவும் பொருட்டு மானியம் வழங்கப்படுகிறது.

பிரதம மந்திரி உணவு பதப் படுத்தும் குரு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) அல்லது வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AIF) திட்டத்தின் கீழ் பயனடையும் பட்டதாரிகளுக்கு மேற்கண்ட திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி உதவி / வட்டி மானியம் போக கூடுதல் மானியம் அதிகபட்சமாக ரூபாய் 1 லட்சம் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற பயனாளிகள் 21 முதல் 40 வயதுடைய இளங்கலை பட்டப்படிப்பு முடித்த வராகவும், அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணி புரியாத வராகவும் இருக்க வேண்டும். கணினி திறன் பெற்ற மற்றும் குடும்பத்திற்கு ஒரு பட்டதாரி மட்டுமே நிதி உதவி பெற தகுதி உடையவர். வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிகின்ற நிறுவனத்தின் உரிமையானது தனி உரிமையாக இருக்க வேண்டும்.

தேவையான ஆவணங்களாவன 10 மற்றும் 12 ஆம் வகுப்பு சான்றிதழ், பட்டபடிப்பிற்கான சான்றிதழ், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, துவங்க உத்தேசித்துள்ள வேளாண் தொழில் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை, வங்கி கணக்கு புத்தகம், வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம் ஆகும்.

இத் திட்டத்தில் பதிவு செய்ய விருப்பம் உள்ள பட்டதாரிகள் அக்ரிஸ்நெட் (AGRISNET) இணைய முகப்பில் பதிவு செய்ய வேண்டும். தங்களின் விரிவான திட்ட அறிக்கையை சம்மந்தப் பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநரிடம் சமர்பிக்க வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு வேளாண் இணை இயக்குநர், வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங் களை தொடர்பு கொள்ளலாம் என செங்கல்பட்டு வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.அசோக் தெரிவித்துள்ளார்.

# கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான காரீப் பருவ பயிற்சி

சிவகங்கை, ஜுன் 27

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரம் வேளாண்மை துறையின் கீழ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் தேர்வு செய்யப்பட்ட பஞ்சாயத்துகளில் ஒன்றான கீழபிடாவூர் பஞ்சாயித்தில் கிராம முன்னேற்ற குழு கூட்ட பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சிக்கு ஊராட்சிமன்ற தலைவர் செல்வி, தலைமை வகித்தார். மானாமதுரை துணை வேளாண்மை அலுவலர் நா.சப்பாணிமுத்து மண் மாதிரி சேகரிப்பு அவசியம் மற்றும் மண் மாதிரி அடிப்படையில் உரநிர்வாகம், பசுந்தாள் விதைப்பு, மானிய திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். பி.வினோத், வெங்கடேஷ்வர உரக்கடை உரிமையாளர் கோடை உழவு செய்வதின் நன்மைகள், பூச்சி, நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் சி.சுமதி கலைஞர் திட்டத்தின் கீழ் மின்கலத் தெளிப்பான், தார்பாய் மானியத்தில் பெற்றுக் கொள்ள எடுத்துக்கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.அமிர்தலட்சுமி, அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றி எடுத்து கூறினார்.

இப்பயிற்சியில் கீழகிடாவூர் பஞ்சாயத்தை சேர்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டார்கள்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# பயறு வகைப் பயிர்களில் மஞ்சள் தேமல் நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை முறைகள்!

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார விவசாயிகள் தற்பொழுது உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப் பயறு போன்ற பயறு வகைகள் விதைப்பு செய்து வருகின்றனர். மேற்கண்ட பயறு வகை பயர்களில் மஞ்சள் தேமல் நோய் மேலாண்மை தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல் எடுத்து பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா கேட்டுக் கொண்டார்.

இந்நோய் பாசிப்பயறு மஞ்சள் தேமல் நச்சுயிரி என்ற கிருமியால் ஏற்படுகிறது. நோய் ஏற்படும் பருவத்தைப் பொருந்து விளைச்சல் இழப்பு 10 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை இருக்கும். இந்நச்சுயிரி துவரை, பச்சைப்பயறு, அவரை ஆகிய பயிர்களிலும் தோன்றும்.

### நோய் ஏற்படச் சாதகமான தட்பவெப்பநிலைகள்

இந்நோயின் அறிகுறிகள் குளிர்ந்த காலநிலையில் அதிகளவில் காணப்படும். வெள்ளை ஈ-யின் எண்ணிக்கை அதிகளவில் இருக்கும் சூழலில் வைரஸ் பரவுவதற்கு மிகவும் சாதகமாக இருக்கும்

### அறிகுறிகள்

முதலில் இளம் இலைகளில் சிறிய மஞ்சள் நிறப்புள்ளிகள் தோன்றும். இவை விரைவாக அளவில் பெரியதாகி, சிறிய மஞ்சள் நிறத் தேமல் அறிகுறிகளை உண்டாக்கும். நாளடைவில் இலைகள் முழுவதும் மஞ்சளாகி விடும். பாதிக்கப் பட்ட பயிர்கள் தாமதமாக முதிர்ச்சியடையும். குறைந்த அளவிலான பூக்கள் மற்றும் காய்களைக் கொண்டிருக்கும். காய்கள் அளவில் சிறியதாக உருமாறிக் காணப்படும். பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தில் நோய் ஏற்பட்டால், விதைகள் உருவாகும் முன்பே செடிகள் இறந்துவிடும்.

### நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்

இந்நச்சுயிரி, வெள்ளை ஈக்கள் (பெமிசியா டெபாசி) மூலம் பரவுகிறது. இந்நச்சுயிரி, களைச் செடிகளான குரோடான் ஸ்பார்சிப்ளோரஸ் (இரயில் பூண்டு). அகாலிபா இண்டிகா (குத்தி),

எக்லிப்டா ஆல்பா (கரிசலாங்கண்ணி) மற்றும் இதரப் பயறு வகைக் குடும்பத்தைச் சார்ந்த பயிர்களில் தங்கி வாழும் தன்மையுடையது.

### மேலாண்மை முறைகள்

தேமல் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை விதைத்த 45 நாட்கள் வரை அகற்ற வேண்டும். அதிகமான விதையளவு (25 கிலோ / எக்டர்) உபயோகிப்பதன் மூலம் பயிர்களின் எண்ணிக்கைக் குறை யாமல் பார்த்துக் கொள்ளலாம். களைச் செடிகளை அகற்ற வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியுள்ள உளுந்து (வம்பன் 8, 10, கோ7 மற்றும் ஏடிடி 7) மற்றும் பாசிப்பயறு (வம்பன் 5, கோ 8 மற்றும் கோ 9) இரகங்களைப் பயிர் செய்யலாம். கோடைக் காலத்தில் அதிகத் தாக்குதல் இருப்பதால், ரபி பருவத்தில் பயிர் செய்யலாம். கலப்புப் பயிராக உளுந்து அல்லது பாசிப்பயறுப் பயிர்களுக்கிடையில் ஒவ்வொரு 15 வரிசைக்கு இடையில் இரண்டு வரிசை மக்காச்சோளம் (60X30 செ.மீ) அல்லது சோளம் (45X15 செ.மீ.) அல்லது கம்பு (45X15 செ.மீ) பயிரை சாகுபடி செய்யலாம். மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை (12 எண்ணிக்கை/எக்டர்) பயன் படுத்தி வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தலாம். விதைகளைத் தயாமீதாம் 25டபுள்யு.ஜி அல்லது இமிடாகுளோபிரிட் 70 டபிள் யு.எஸ் (4.0 கிராம் / கிலோ) பூச்சிக்கொல்லிகளைக் கொண்டு விதை நேர்த்திச் செய்ய வேண்டும். நோயைப் பரப்பும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த, தயாமீதாம் 25 டபிள்யு. ஜி (100 கிராம் /எக்டர்) அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எஸ் (100 மி.லி. / எக்டர்) அல்லது மீதைல் டெமடான் (2.0 மி.லி / லிட்டர்) அல்லது டைமீத்தோயேட் (20 மி.லி./லிட்டர்) தெளிக்கலாம்.



# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை உதவி இயக்குநர் சோளம் விதைப்பண்ணை ஆய்வு



கோயம்புத்தூர், ஜூன் 27

நல்ல விளைச்சல் தரக் கூடிய சான்று விதை உற்பத்தியை அதிகரிக்க வேளாண்மைத்துறை மூலமாக மானிய விலையில் விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி, அவர்களை விதை உற்பத்தியாளர்களாக்கி விதைச்சான்றுத்துறையின் மூலம் பயரின் பல்வேறு வளர்ச்சிப் பருவங்களில் ஆய்வு செய்யப்பட்டு, தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட வழிவகை செய்கின்றது.

கோவை மாவட்டம், S.S. குளம் வட்டாரத்தில் நடப்பாண்டில் 47.59 ஹெக்டர் சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இடிகரை கிராமத்தில் வேளாண்மைத்துறை மூலமாக அமைக்கப்பட்டுள்ள சோளம் CO-32 விதைப்பண்ணை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத்துறை உதவி இயக்குநர் பி.ஆ.மாரிமுத்து ஆய்வு செய்தார். பயிர் விலகுதூரம், கலவன்கள் எண்ணிக்கை பிற ரக பயிர்கள் கலப்பு மற்றும் குறித்தறிவிக்கப்பட்டநோய் போன்ற காரணிகள் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது ப.பிரியதர்ஷினி, விதைச்சான்று அலுவலர், கோவை, உதவி விதை அலுவலர் விஜய் மற்றும் சுரேஷ் உடன் இருந்தனர்.

சோளம் CO-32 இரகமானது காரீப் பருவத்திற்கு ஏற்ற இரகமாகும். 105–110 நாட்களில் முதிர்ச்சியடையும். இதில் தானிய மகசூல் எக்டருக்கு 2400 கிலோவும் மற்றும் தீவன மகசூல் எக்டருக்கு 6500 கிலோ வரை கிடைக்கும். தானிய மாகவும், சோளத்தட்டை கால்நடைகளுக்கான தீவனமாகவும் இரட்டிப்பு பயன் தரக்கூடியது. இதன் கதிர்கள் மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். மேலும், சோளப் பயிர்களைத் தாக்கும் தண்டு துளைப்பான் பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புச்சக்தி உடையது. எனவே, சோளம் CO-32 பயிர் செய்து அதிக மகசூல் பெறலாம் என கேட்டுக் கொண்டார்.

தலைக்கவசம் உயிர்க்கவசம்

# உயிர்ம வேளாண்மையில் பசுந்தாள் உரங்கள் முக்கிய பங்கு – ஓர் பார்வை

இராமநாதபுரம், ஜூன் 27

உயிர்ம வேளாண்மையில் பசுந்தாள் உரங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் மண் வளத்தை நீடித்து நிலையாக மேம்படுத்திட உயிர் உரங்கள் மற்றும் உயிர்ம இடுபொருட்களின் பங்கு இன்றியமையாதது. தற்போது தொழு உரம் அதிகமாக நிடைக்காத நிலையில் பசுந்தாள் உர பயிர்களை பயிரிடுவது முக்கியமானது. இவை மண் அரிப்பை தடுப்பதுடன், மண்ணில் தழைச்சத்தினையும் ஊட்டச் சத்தினையும் நிலை நிறுத்துகின்றன. சணப்பு, தக்கைப்பூண்டு, அகத்தி போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை பயிர் சாகுபடி இல்லாத தருணத்தில் மழையை பயன்படுத்தி ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ என்ற விதையளவை பயன்படுத்தி விதைத்து,




நன்கு வளர்த்து, பூக்கும் தருணத்தில் மடக்கி உழுவதன் மூலம் நிலத்தின் வளம் மேம்படுகிறது- களர் மற்றும் உவர் நிலங்களை மேம்படுத்துவதற்கு தக்கைப் பூண்டு பசுந்தாள் பயிரிட்டு மடக்கி உழுவது சாலச்சிறந்ததாகும்.

பசுந்தாள் உரம் பயிரிட்டு உழ இயலாத விவசாயிகள் பசுந்தழைகளான புங்கம், வேம்பு, வேம்பு, எருக்கு, ஆவாரை மற்றும் பூவரசு இலைகளை வெட்டி எடுத்து வந்து, வயலில் இட்டு உழுது மக்கவைத்து பின் பயிர் செய்யலாம். இவ்வாறு பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மண் வளத்தை மேம் படுத்துவதன் மூலம் உயிர்ம விவசாயத்தில் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துகளை தருவதுடன் மண்ணில் வாழும் நுண்ணுயிர்களுக்கும் உணவளிப்பதால் நல்ல மகசூல் பெறலாம் என இராமநாதபுரம் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சி.சிவகாமி தெரிவித்துள்ளார்.

# நெப்புகை கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான விவசாயிகள் பயிற்சி



புதுக்கோட்டை, ஜூன் 27

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டத்தின் கீழ் நெப்புகை கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ் அனைவரையும் வரவேற்று பேசினார். துணை வேளாண்மை அலுவலர் வெற்றிச்செல்வன் பேசுகையில், வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், பி.எம்.கிசான் திட்டம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக்கூறினார். மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள் தரிசு நில தொகுப்பு மூலம் பாசன வசதி அமைத்தல் பற்றி எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் கமலி, வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணியன், அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சியின் இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கமலி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங்களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மானிய கோரிக்கையில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்ந்த திட்ட அறிவிப்புகள் - எவை தெரியுமா?

தமிழக சட்டமன்றத்தில் 22.6.24ல் நடைபெற்ற வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பாக நடைபெற்ற மானியக்கோரிக்கையில், வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை சார்ந்த திட்டங்களை பற்றி பார்ப்போம்.

1) மழையிலிருந்து, வேளாண் விளை பொருட்களை பாதுகாத்திட 5 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் (RM) 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

**எந்த எந்த ஊரில்?**

வேளாண் விளை பொருட்களை மழையினால் ஏற்படும் சேதங்களிலிருந்து வீணாகமல் பாதுகாத்திட செஞ்சி (விழுபபுரம்), போளூர் (திருவண்ணாமலை), விருத்தாசலம் (கடலூர்) மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள திருக்கோவிலூர், உளுந்தூர் பேட்டை உட்பட 5 மார்க்கெட் கமிட்டியில் 24-25 ஆண்டில் 15,000 சதுர அடியில் பாதுகாப்பு கூடங்கள் அமைக்கப்படும்.

2) தமிழகத்தில் நன்றாக செயல்பட்டு வரும் 25 முன்னணி உழவர் உற்பத்தியாளர் (FPO)விற்கு தேசிய அளவிலான சிறந்த மேலாண்மை நிறுவனங்களில் படித்தவர்களை (CEO) தலைமை செயல் அலுவலராக நியமன செய்ய 3 கோடி ஒதுக்கீடு.

வேளாண் விளைப் பொருட்களை ஒன்று திரட்டி சந்தைப் படுத்துதல், மதிப்புக்கூட்டி விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கை களை செயல்படுத்த 25 முன்னணி நிறுவனங்களுக்கு (FPO) தலைமை செயல் அலுவலராக முன்னனி வேளாண்மை மேலாண்மை பயிற்சி பெற்றவர்களை நியமிக்க 24-25 ஆண்டில் 3 கோடி பணம் ஒதுக்கீடு.

3) அதிக காய்கனி வரத்துடன் செயல்பட்டு வரும் 20 உழவர் சந்தைகளில் அவற்றின் செயல்பாடுகளை மேலும் அதிகரிக்கவும் அவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 3 கோடி ஒதுக்கீடு.

நாளென்றுக்கு 30 மெ.டன் காய்கறி வரத்து கொண்ட 20 உழவர் சந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, விவசாயிகள், நுகர்வோர் களுக்கு தேவையான கூடுதல் வசதிகளுடன் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த இந்த 3 கோடி நிதி ஒதுக்கீடு.

4) தேசிய அளவிலான உணவு பதப்படுத்துதல் நிறுவனங்கள் மூலமாக விவசாயிகளுக்கு பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் தயாரித்தல் குறித்த பயிற்சி வழங்கிட 1 கோடியே 20 லட்சம் ஒதுக்கீடு.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைப்பொருட்களை, பதப்படுத்தி, மதிப்புக்கூட்டி விற்பனை செய்திடவும் அவர்களுக்கு ஏற்றுமதி சந்தை வாய்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க தேசிய அளவிலான உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மூலமாக பயிற்சி அளிக்க இந்த நிதி ஒதுக்கபட்டுள்ளன.

5) வேளாண் விளைப்பொருட்களை ஏற்றுமதிக்கான வழிமுறைகள் விவசாயிகள் எளிதில் அறிந்து செயல்படும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (EXPORT CONSULTANCY SERVICES) 'ஏற்றுமதி ஆலோசனை மையம்' தொடங்குதல்.




6) வேளாண்மை கட்டமைப்பு நிதித்திட்டத்தில், வங்கி கடன் பெற்று வேலை துவங்கிட, ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு திட்ட அறிக்கை (DPR) தயாரித்து வங்கி கடன் பெறுவது வரையிலான அனைத்து விதமான உதவிகளை செய்திட ஏதுவாக 'மாவட்ட அளவிலான ஆலோசனை மையம்' தொடங்குதல்.

7) வேளாண் விளைப் பொருட்களின் தரத்தை விவசாயிகள் அறிந்திடும் வகையில், தரம் பிரிப்பு, பகுப்பாய்வு பயிற்சிகள் கிராம அளவில் அக்மார்க் வேளாண்மை அலுவலரால் (AO AGMARK) பயிற்சி அளிக்கபட்டு சான்றிதழ் (CERTIFICATE) வழங்கிட படுகிறது இந்த நிதியாண்டு முதல்.

இதுபோன்ற எண்ணற்ற அறிவிப்புகளை மற்ற துறைகளில் (AGRI.ENGINEERING) நாளை பார்ப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# இப்கோ சாகரிகா (கடற்பாசி உரம்)–ஓர் பார்வை

சாகரிகா குருணை மற்றும் திரவ உரமானது கடற்பசியால் ஆன உயிர் ஊக்கிகளை கொண்டது. இதில் 14–18% சாம்பல் சத்துகள், பயிர் வளர்ச்சிக்கு தேவையான அமினோ அமிலங்கள், வளர்ச்சி ஊக்கிகள், பேரூட்டச்சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துகள் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

சாகரிகா மற்றும் சாகரிகா கோல்ட் குருணை உரம் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ குருணை உரத்தை அடி உரமாக இடவேண்டும். மேலும், நடவு செய்த 15–20 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ குருணை உரத்தை இடவேண்டும். நீண்டகால பயிர்களில் ஒரு செடிக்கு 100–150 கிராம் சாகரிகா குருணை உரத்தை பயன்படுத்தலாம்.

**சாகரிகா மற்றும் சாகரிகா கோல்ட் திரவ உரம்**

**இலை வழி தெளிப்பு**

ஒரு லிட்டர் நீருக்கு 2–5 மி.லி. சாகரிகா திரவ உரத்தை கலந்து பயிரின் முக்கிய வளர்ச்சி பருவங்களான கிளைப்பு / தூர் விடும் பருவம், பூக்கும் பருவத்திற்கு முன் மற்றும் பூக்கும் பருவத்திற்கு பின் மூன்று தெளிப்பாக தெளிக்கவும். சாகரிகா திரவ உரத்தை இலை வழி தெளிப்பு மூலமாகவோ அல்லது சொட்டு நீர்ப்பாசனம் மூலமாகவோ பயன்படுத்தலாம். சாகரிகா திரவ உரத்துடன் நானோ திரவ உரங்கள், முற்றிலும் நீரில் கரையக்கூடிய உரங்கள், வேளாண் பூச்சிகொல்லி மருந்துகளும் கலந்து பயன்படுத்தலாம்.

**நன்மைகள்**

- விதையின் முளைப்பு திறனை மேம்படுத்தும்.
- பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கும்.
- கரிம மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு திறனை அதிகரிக்கும்.
- பயிரின் வேர் வளர்ச்சியை வலுப்படுத்தும்.
- வறட்சி, வெப்பம், குளிர் மற்றும் உப்புத்தன்மை போன்ற சூழலின் அழுத்தங்களுக்கு பயிரின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

- ADVT.


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
குருணை உரங்களை விட விலை குறைவு
உரச்செலவை குறைக்கிறது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO
DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
Less Cost, More Profits
Suitable for all Crops
NANO FERTILISER
FCO Approved
500 ml
விலை ரூ.600/-

# புதுப்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு காரிப் விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூன் 27

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரத்தில் 26.6.24 அன்று வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பு.புதுப்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு, காரிப் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி




இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை வளர்ச்சி திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் வேளாண்மை அலுவலர் சுந்தரபாண்டியன் கலந்து கொண்டு வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் உள்ள மாநிலத் திட்டங்கள் மற்றும் அரசின் திட்டங்களை விளக்கி கூறினர். உதவி வேளாண்மை அலுவலர் கண்ணன், வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருள்கள் மற்றும் அதன் பயன்பாடுகள் மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

கிருஷ்ணா கல்லூரி உதவி பேராசிரியர் ஜெயமுருகன் காரிப் பருவ பயிற்சியில் பயிரிடும் முறை மற்றும் அதன் தொழில்நுட்ப முறைகளை விளக்கி கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சண்முகப்பிரியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பழனி, பயிர் சாகுபடி முறைகள் மற்றும் மண் மாதிரி எடுத்தல் முதலிய தொழில்நுட்ப முறைகளை எடுத்துக் கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர் சிவபாண்டி பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பு காலநிலை மாற்றத்திற்கான வறட்சி நில மேம்பாட்டு திட்டத்தில் மண்மாதிரி விழிப்புணர்வு முகாம்

ASPIRATIONAL DISTRICT என்ற வரிசையில் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டாரத்திலுள்ள கட்டங்குடி, செம்பட்டி பஞ்சாயத்து தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த கிராமத்தில் SMALLGRANTS PROGRAM கீழ் காலநிலை மாற்றத்தை எதிர் கொண்டு அதனை சரி செய்யும் வகையில் சிறு / குறு விவசாயி களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க விடியல் தொண்டு நிறுவனம் முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது. அந்த முன்னெடுப்புக்கு உறுதுணையாக திருச்சுழியில் SPEECH தொண்டு நிறுவனம் மற்றும் ரீலையன்ஸ் பவுண்டேஷன் இணைந்து மண்மாதிரி விழப்புணர்வு முகாம் கட்டங்குடியில் பஞ்சாயத்து தலைவர் மகாலட்சுமி ராஜாக்கனி தலைமையிலும் செம்பட்டி பஞ்சாயத்தை சேர்ந்த குறிஞ்சாக்குளம் கிராமத்தில் நல்ல மருதன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் ஸ்பிச் கள மேலாளர் பிச்சை வரவேற்று, தங்களுடைய நிறுவன செயல்பாட்டை விரிவாக எடுத்துக்கூறினார். விடியல் நிறுவனத் தலைவர் தேனி காமராஜ் பேசுகையில், வளர்ந்து வரக்கூடிய மாவட்டங்களில் இந்த கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு இங்குள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல திட்டங்கள் குறித்த வறட்சியில் வேளாண்மையில் சாதனை படைக்க பல்வேறு முறைகள் மரங்கள் வளர்க்க குளம், குட்டைகள், தூர்வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளபடும் என்றார்.

நிகழ்ச்சியில் ரீலையன்ஸ் தொண்டு நிறுவன மேலாளர் ஸ்ரீ கிருபா பேசுகையில், வேளாண்மை மற்றும் கால்நடைகள் சம்மந்தப்பட்ட ஆலோசனைகள் போன்றவற்றை நாங்கள் இலவசமாக வாட்சாப், குறு தகவல் மூலமாக வழங்கி வருகிறோம். அத்துடன் அல்லாமல் கட்டணமில்லாத அலைபேசி வாயிலாக (1800 419 8800) தொடர்பு கொள்ள வேண்டும் என்றார்.

வேளாண்மை வல்லுநர் சந்திரசேகரன் கலந்து கொண்டு மண்மாதிரி எடுப்பதன் அவசியம் மற்றும் எந்த எந்த இடங்களில் மண் மாதிரி சேகரம் செய்யக்கூடாது, எப்படி எடுக்க வேண்டும் என்பதை செயல்விளக்கமாக செய்து காட்டினார். மேலும், விவசாயிகளிடையே ஏற்பட்ட பல்வேறு சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

வட்டார வேளாண் பொறியாளர் சாலினி கலந்து கொண்டு வேளாண் பொறியியல் துறையின் செயல்பாடுகள், உழவு கருவிகள் வாடகைக்கு விடுதல் மற்றும் உழவன் செயலி (APP) மூலமாக பதிவு செய்தல் போன்றவற்றை விரிவாக எடுத்துக்கூறினார். நிகழ்ச்சியில் தேனி ஆடு வளர்ப்போர் உற்பத்தியாளர் நிறுவன டைரக்டர் காசிராஜன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி, மரங்கள் நடுவது ஏன், என்ன மரக்கன்றுகள் தேவை என்ற விபரங்களை விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

நிகழ்ச்சிக்கான எற்பாடுகள் SPEECH முத்து செல்வி மற்றும் ரீலையன்ஸ் வேம்புலு சிறப்பாக செய்திருந்தனர்.

# விவசாயிகளுக்கு கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி

நாமக்கல், ஜூன் 27

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம், சின்னமணலி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் கிராம அளவிலான வேளாண் முன்னேற்றக்குழு உறுப்பினர்களுக்கு காரிப்பருவ சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெ.ஜெய மாலா தலைமை வகித்து வேளாண்மை துறையின் மானிய திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், மத்திய ,மாநில திட்ட மானிய விபரங்கள் மற்றும் தற்போது பயிரிடப்படும் பயிர்களில் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை முறைகள், உயிர் உரங்களின் பயன்கள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் ராஜதுரை மண் வள அட்டை, மண் மற்றும் நீர் பரிசோதனை முக்கியத்துவம் பற்றியும் நுண்ணீர் பாசனத்திட்டம், பயிர் காப்பீடு மற்றும் பிரதம மந்திரி கௌரவ நிதி திட்டம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் பூபதி பயிர்களுக்கு நுண்ணூட் டங்கள் இடுவதின் அவசியம், வேளாண் விரிவாக்க மையத்தில் வைக்கப்பட்டுள்ள இடுபொருள் மானிய விபரங்கள் பற்றி விரிவாக எடுத்து கூறினார். வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் திவாகர், அட்மா திட்டத்தின் செயல்பாடுகளை பற்றி விரிவாக எடுத்து கூறினார். மேலும் வாசுகி, உதவி தொழில்நுட்ப மேலாளர் உழவன் செயலி பற்றியும் அதன் பயன்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# டிஏபி உரத்திற்குப் பதிலாக விலை குறைந்த சூப்பர் பாஸ்பேட் உரத்தைப் பயன்படுத்தலாம்

## வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, ஜூன் 27

டி.ஏ.பி. உரத்திற்குப் பதிலாக விலை குறைந்த சூப்பர் பாஸ்பேட் உரத்தை விவசாயிகள் பயன்படுத்தலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

சூப்பர் பாஸ்பேட் உரத்தில் 16 சதவீதம் மணிச்சத்து மற்றும் சல்பர், கால்சியம் போன்ற நுண்ணூட்ட உரங்கள் சிறிதளவு உள்ளன. சூப்பர் பாஸ்பேட் உரம் உள்நாட்டிலேயே தயார் செய்யப்பட்டு எளிதில் கிடைக்கிறது. சூப்பர் பாஸ்பேட் உரத்தின் மூலம் பயிர்களுக்கு கால்சியம் மற்றும் சல்பர் சத்து கூடுதலாகக் கிடைக்கிறது. மேலும் நீரில் கரையும் மணிச்சத்து கிடைப்பதால் பயிரின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. நிலக்கடலை மற்றும் எள் போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு சல்பர் அதிகம் தேவைப்படுவதால் சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்துவதன் மூலம் அதிக எண்ணெய்ச்சத்துடன், எண்ணெய்ச்சத்துப் பயிர்களின் மகசூல் அதிகரிக்கிறது. சூப்பர் பாஸ்பேட்டில் உள்ள பாஸ்பேட் எளிதில் கரையும் உரம் என்பதால் சூப்பர் பாஸ்பேட் எனப் பெயர் பெற்றுள்ளது. எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்து உள்ள கரும்பு, எண்ணெய்வித்துப் பயிர்களான தென்னை மற்றும் நிலக்கடலை, தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தேவைப்படும் சூப்பர் பாஸ்பேட் உரத்தினை வாங்கி பயன் பெற கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள். வளர்ந்த தென்னை மரம் ஒன்றிற்கு யூரியா 1.2 கிலோகிராம், சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ கிராம், பொட்டாஷ் 2 கிலோ கிராம் என்றஅளவில் நேரடி உரங்களைப் பயன்படுத்துவதால் உரப் பயன்பாடு அதிகரிக்கிறது. மேலும், விவசாயிகள் சாகுபடிக்கு முன்ன தாக ஒரு ஏக்கருக்கு 300 கிலோ கிராம் மட்கிய தொழு உரத்துடன் பரிந்துரைக் கப்பட்ட சூப்பர் பாஸ்பேட் உரத்தினைக் கலந்து 30 நாட்கள் வைத்திருக்க வேண்டும். பின்னர் அதனை அடியுரமாக பயிர் சாகுபடிக்கு முன் இடுவதனால் மணிச்சத்தின் பயன்பாடு அதிகரிக்கிறது. மேலும், பயிர்கள் வறட்சியை தாங்கி வளரும் தன்மையை பெறுகிறது. விவசாயிகள் பாஸ்போ பாக்டீரியா என்னும் உயிர் உரத்தை பயன்படுத்துவதன் மூலம் மண்ணில் கிட்டா நிலையில் உள்ள மணிச்சத்தினை கரைத்து பயிர்களுக்கு வழங்கிடலாம்.

எனவே விவசாயிகள் டி.ஏ.பி. உரத்திற்குப் பதில் விலை குறைவான சூப்பர் பாஸ்பேட் உரத்தினைப் பயன்படுத்தலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# மண்வள அட்டை - ஓர் பார்வை

● மண்ணின் தன்மைக்கேற்பவும் அதிலுள்ள ஊட்டச் சத்துகளின் விகிதத்திற்கு ஏற்பவும் சரியான அளவில் ஊட்டச் சத்துக்களை பரிந்துரைக்கவும் அதிகளவு இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்கவும் மண்வள அட்டை திட்டம் 2015-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

● மண்வள அட்டை திட்டத்தின் முக்கிய நோக்கம் மண்வளம் மற்றும் அதன் ஊட்டச்சத்து குறித்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவது.

● மேலும் தமிழ் மண்வளம் இணையதளத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் அனைத்து மண்வள அட்டைகளும் கணினிமயமாக்கப்பட்ட மண் வள அட்டையாக மட்டுமே வழங்கப்படும்.

**மண்வள அட்டை**

● விவசாயிகள் சொந்த அனுபவத்தையும், அறிவுத் திறனையும் கொண்டு மண்வளத்தைக் கண்காணிக்கவும், மேம்படுத்தவும் இந்த அட்டை ஒரு கருவியாகப் பயன்படுகிறது.

● காலப்போக்கில் மண்வளத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அதற்கான மேலாண்மை உத்திகளையும் இந்த அட்டையின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

● மண் வளத்தை பரிசோதனை செய்ய நினைக்கும் விவசாயிகள் தங்களது நிலத்தில் உள்ள மண்ணை சரியான முறையில் எடுத்து அருகில் உள்ள மண் பரிசோதனை நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் மையத்திற்கு கொண்டு சென்று பரிசோதிக்கலாம்.

● தமிழ்நாடு அரசின் வேளாண்மை துறையின்கீழ் இயங்கும் மண் பரிசோதனை ஆய்வகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் ஒரு மண் மாதிரி பரிசோதனை செய்ய ரூ.20 கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது. மேலும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் தலா 100 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைச் செய்யப்படுகிறது.

**மண்வள அட்டையில் உள்ள விவரங்கள்**

● மண்வள அட்டையில் பேரூட்டச்சத்துக்கள், நுண்ணூட்டச் சத்துக்கள், சுண்ணாம்பின் நிலை, உப்பின் நிலை, கார அமில நிலை மற்றும் நிலச்சீர்த்திருத்தப் பரிந்துரைகள் இடம் பெற்றிருக்கும்.

● சத்துக்கள் மண்ணில் எவ்வளவு உள்ளது என்பதை பொறுத்து நிலத்தில் எந்த வகையான உரத்தை எவ்வளவு விகிதத்தில் பயன்படுத்த வேண்டும் எனவும், மண்ணின் தரத்திற்கேற்ப சரியான பயிர்களை தேர்வு செய்யவும் மண்வள அட்டை உதவுகிறது.

**மண்வள அட்டையின் பயன்கள்**

● மண்ணின் தரத்தை அறிந்து அதற்கேற்ப ஊட்டச்சத்துக்களை பயன்படுத்தலாம்.

● மண்ணுக்கும், பயிருக்கும் ஏற்ற உரங்களை ஏறத்தாழ சரியான அளவில் கொடுத்து அதிக மகசூல் பெறலாம்.

● இரசாயன உரங்களின் பயன்பாட்டை அதிகளவில் குறைக்க லாம்.

● மண்ணின் வளத்திற்கேற்ப பயிர்களை தேர்வு செய்யலாம்.

● சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைத்து நல்ல தரமான நிலத்தை உருவாக்கலாம் என்று வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் ஆகியோர் ஒரு அறிக்கையில் கூறியள்ளனர்.

## வாலாஜா வட்டாரத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி



இராணிப்பேட்டை, ஜுன் 27

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில் தென்கடப்பந்தாங்கல் கிராமத்தில் வேளாண்மை துறையின் சார்பாக ஆத்மா திட்டத்தின் கீழ் கிராம வேளாண் முன்னேற்ற குழு பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குனர் திலகவதி இப்பயிற்சிக்கு தலைமையேற்று வேளாண்மை துறை திட்டங்கள் அனைத்தையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் எவ்வாறு விவசாயிகள் பயனடைவது என்பதை பற்றியும், வரப்பில் உளுந்து பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பயிர் சுழற்சியின் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்தும் தெளிவாக விளக்கினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அதனைத் தொடர்ந்து காவிரிப்பாக்கம் மண் ஆராய்ச்சி நிலையம் வேளாண்மை அலுவலர் பாரதி மண் பரிசோதனையின் நன்மைகள், மண் சேகரிக்கும் முறைகள், மண்வள அட்டையின்படி உரத்தினை மண்ணிற்கு அளிப்பது குறித்தும் மற்றும் நீர் பரிசோதனை முக்கியத்துவம் குறித்தும் தெளிவாக விளக்கினார். அதனைத் தொடர்ந்து உதவி வேளாண்மை அலுவலர், மேகலா, வேளாண்மை துறையின் திட்டங்கள், கிடங்கில் உள்ள வேளாண் இடுபொருட்கள் குறித்து விளக்கினார். தொடர்ந்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் சசிகலா, உழவன் செயலியை எவ்வாறு பதிவிறக்கம் செய்தல் அதில் உள்ள திட்டங்கள் குறித்தும் தெளிவாக விளக்கினார். இறுதியாக உதவி தொழில்நுட்ப மேலாளர் நர்மதா நிகழ்ச்சியில் நன்றியுரை தெரிவித்து பயிற்சி நிறைவு செய்தார்.



# பாரம்பரிய நெல் இரகங்களின் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ குணங்கள் – ஓர் பார்வை

பாரம்பரிய நெல் இரகங்கள்

நெல் இந்தியாவின் முக்கிய உணவு பயிர் ஆகும். மொத்த சாகுபடி பரப்பில் நான்கில் ஒரு பங்கு நெல் பயிரிடப்படுகிறது. உலகில் 10000 வகையான நெல் இரகங்கள் உள்ளன. இந்தியாவில் சுமார் 4000 நெல் இரகங்கள் உள்ளன.



**பாரம்பரிய நெல் இரகங்கள்**

அரிசி உணவு உடலின் அத்தியாவசிய செயல்பாடுகளுக்கு மிக முக்கியமானது. பாரம்பரிய நெல் இரகங்களில் எண்ணற்ற ஊட்டச்சத்துக்களும், மருத்துவ குணங்களும் அடங்கியுள்ளன. குறைந்த அளவு கொழுப்பு சத்தும், அதிகளவு ஒரைசனோலும் அடங்கியுள்ளன. உடல் பருமன் மற்றும் இதர ஆரோக்கிய சீர்குலைவு வராமல் தடுக்கிறது. இவை அனைத்து வகையான தட்பவெப்ப நிலைகளையும் தாங்கி வளரக்கூடியது. பூச்சி நோய் தாக்குதளுக்கும் எதிர்ப்பு திறன் உடையது.

**பாரம்பரிய நெல் இரகங்களின் ஊட்டச்சத்து**

பாரம்பரிய நெல் இரகங்கள் சரிவிகித ஊட்டச்சத்தை நம் உடலுக்கு அளிக்கிறது. வைட்டமின்களில் நியாசின், தையமின், ரிபோபிலவின் மற்றும் வைட்டமின்-டியும் தாதுப்புக்ககளில் கால்சியம் மற்றும் இரும்பும் அதிகளவில் செறிந்துள்ளன.

| அரிசி | GI (நவீன பொன்னி அரிசி கன்ட்ரோலாக பயன்படுத்தப்பட்டது) |
|---|---|
| கருங்குறுவை | 53.81 |
| மாப்பிள்ளை சம்பா | 68.84 |
| குடைவாழை | 66.34 |
| காலாநமக் | 50.71 |
| பெருங்கார் | 75.84 |
| கவுனி | 52.36 |
| குள்ளக்கார் | 52.25 |
| நீலம் சம்பா | 84.37 |

● நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு சிறந்த உணவாகும். (குறைந்த அளவு சர்க்கரையும்; அதிக அளவு நார்ச்சத்தும் அடங்கியுள்ளன).

● பாரம்பரிய நெல் இரகங்களை தொடர்ந்து உட்கொள்வதால் கிளைசிமிக் அளவை குறைத்து டைப் – ண்ணூ நீரிழிவு நோய், இருதய நோய் மற்றும் உடல் பருமன் ஆகியவற்றைக் குறைக்கிறது.

● கரையாத நார்ச்சத்து உள்ளதால் புற்றுநோய் எதிராக உடலைப் பாதுகாக்கிறது.

● உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. (குறைந்த அளவு சோடியமும்; அதிக அளவு அமினோ அமிலங்களும் அடங்கியுள்ளன).

● உடலுக்கு எந்த விதமான ஒவ்வாமைகளையும் ஏற்படுத்துவதில்லை. (உரமிடுதல் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்படுத்துதல் மிகவும் குறைவு).

### பாரம்பரிய நெல் இரகங்களின் மருத்துவ குணங்கள்

யுனானி மற்றும் ஆயுர்வேதம் ஆகிய மருத்துவ முறைகளில் பாரம்பரிய நெல் இரகங்களை கொண்டு பல நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கப்படுகிறது. புலவர்கள் மற்றும் சித்தர்கள் பாரம்பரிய நெல் இரகங்களில் ஆற்றல் அதிகம் உள்ளதால் தொடர்ந்து உட்கொள்ளும்போது இளமையாகவும், நீண்டநாளும் வாழமுடியும் என்பதற்கு சான்றாக இருந்துள்ளனர்.

● **பாரம்பரிய அரிசி கஞ்சி :** நரம்பியல் நோய்கள், உடல்வலி மற்றும் கண்கோளாறுகளை குணப்படுத்தவும் பயன்படுகிறது.

● **பாரம்பரிய அரிசி வகைகள் :** சுவாசக்கோளாறு மற்றும் செரிமான நோய்களை சரிசெய்யும் பண்புகளையும் கொண்டுள்ளது.

● **நிறமிகு அரிசி வகைகள் :** உடலுக்கு ஊக்கமளித்து உடலை வலுபெறச் செய்கிறது (அதிகளவு ஆண்டிஆக்ஸிடன்ட் மற்றும் பாலிபினால் அடங்கியுள்ளன).

● **நிறமிகு அரிசி வகைகள் :** வெள்ளை அரிசியை விட மூன்று மடங்கு அதிக துத்தநாகம் மற்றும் இரும்பு சத்துக்களை கொண்டுள்ளது.

### முக்கியமான பாரம்பரிய நெல் இரகங்கள்

#### கவுனி அரிசி



கவுனி அரிசி சோழர் காலத்தில் அதிகமாக பெயரிடப்பட்டது. தொடர்ந்து உட்கொள்ளும்போது உடலை வலுபெறச் செய்கிறது. இரும்பு சத்து அதிகளவில் இருப்பதால் கர்ப்பிணி பெண்களுக்கு சுகப்பிரசவம் நடைபெற அக்காலத்தில் அதிகம் கொடுக்கப்பட்து. கவுனி அரிசி வகைகளில் சிகப்பு மற்றும் கருப்பு கவுனி அரிசி ஆகிய இரு வகைகள் உள்ளன.

தகவல் : **முனைவர் ஆ.மதிவாணன், தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம்.**

மேலும் விபரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம், தொலைபேசி எண் : 04365-299806, மின்னஞ்சல் : kvksikkal@tnfu.ac.in.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd. Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.